கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு 2009/2010

(மார்ச்-மே 2014) (வெளிவாரி)

LIBRARY EASTERN UNIVERSITY, SRI LANKA 18 JUL 2014

## HC 301 இந்து சமயத்தின் சிந்தனை மரபுகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. இந்து சமய தத்துவ சிந்தனை மரபுகளின் கட்டுருவாக்கத்தில் உபநிடதங்கள் பெறுகின்ற முக்கியத்துவத்தினைப் பரிசீலனை செய்க.

02. "இந்து தத்துவக் கோட்பாடுகளைப் புரிந்து கொள்வதற்குப் பிரமாணங்கள் (அளவைகள்) பற்றிய அறிவு அடிப்படையானது" ஆராய்க.

03. "அத்வைத வேதாந்த மரபில் "பிரபஞ்சம்" தொடர்பான கருத்தியல்கள் தனித்துவமானவை" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை மதிப்பிடுக.

04. பன்மைவாதம் என விசிட்டாத்வைதம் சுட்டப்படுவதற்கான நியாயப்பாடுகளை எடுத்துரைக்க.

05. "எல்லா நிலைகளிலும் வேறுபாட்டு தன்மையினைச் சாதிப்பதாகவே துவைதவேதாந்தம் அமைந்துள்ளது." - இக்கூற்றின் பொருத்தப்பாட்டைப் பரிசீலனை செய்க.

06. சைவசித்தாந்திகள் விவரிக்கும் பதிக்கொள்கை தொடர்பான சிந்தனைகளைத் தகுந்த எடுத்துக்காட்டுகளின் உதவியுடன் விளக்குக.

07. "வேதாந்தச் சிந்தனை மரபின் திறவுகோலாக பிரம்மசூத்திரம் விளங்குகிறது" ஆராய்க.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு விளக்கக் குறிப்புகள் எழுதுக.

(அ) பதினெண் மகா புராணங்கள்
(ஆ) திருமந்திரம்
(இ) சிவஞானபோதம்
(ஈ) ஞானாமிர்தம்